பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 10 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ராஜஸ்தான் மாநிலத்தில் இன்றும் நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.
2. நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் ரயில் விபத்துகள் பெருமளவு குறைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.
4. தெற்கு லெபனானில் தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் ஹிஸ்புல்லா அமைப்புடனான மோதலில் இஸ்ரேல் ராணுவ வீரர்கள் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.
5. உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் பயணமாக இன்று ராஜஸ்தான் மாநிலத்திற்கு செல்கிறார்.

இன்று உதய்ப்பூரில் உள்ள மோகன்லால் சுகாதியா பல்கலைக்கழகத்தின் 32-வது பட்டமளிப்பு விழாவில் அவர் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

நாளை மவுண்ட் அபுவில் நடைபெறவுள்ள பிரம்மகுமாரிகள் அமைப்பின் மாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

ராஜஸ்தான் அரசு ஏற்பாடு செய்துள்ள பழங்குடியினர் மாநாட்டிலும் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொள்கிறார்.

**[]<<<>>>[]**

சமூகத்தில் கூட்டு முயற்சிகள் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த பத்து ஆண்டுகளில் தூய்மை இந்தியா இயக்கம் மக்கள் இயக்கமாக மாறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான செய்தி தொகுப்பு ஒன்றையும் அவர் பதிவிட்டுள்ளார்.

140 கோடி மக்களின் பங்கேற்புடன் தனித்துவமான முறையில் இந்த இயக்கம் நடைபெற்று வருவதாக திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்,

[]<<<>>>[]

இந்தியாவில் தூய்மை இந்தியா இயக்கம் கடந்த பத்து ஆண்டுகளாக வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதற்கு உலகளாவிய அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

உலகவங்கி தலைவர் திரு அஜய்பங்கா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்த இயக்கம் தூய்மையை அதிகரித்து இந்தியாவின் சுற்றுப்புற சுகாதாரத்தை மேம்படுத்தி வருவதாக கூறியுள்ளார்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் தலைவர் திரு **Masatsugu Asakawa** வெளியிட்டுள்ள பதிவில், தொலைநோக்கு சிந்தனையுடன் கூட்டு முயற்சியாக இது வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் தூய்மையை அதிகரிப்பதில் இந்த இயக்கத்தின் பங்கு அளப்பறியதாக உள்ளது என மைக்ரோ சாப்ட் நிறுவனர் திரு பில்கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

டாடா அறக்கட்டளையின் தலைவர் திரு ரத்தன் டாடாவும், தூய்மை இந்தியா இயக்கத்திற்காக பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

குஜராத் மாநிலத்தின் அகமதாபாத்தில் 141 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள காவல் ஆணையர் அலுவலகத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா இன்று திறந்து வைக்கிறார்.

ஏழு தளங்களுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த அலுவலகம் அதிநவீன வசதிகளைக் கொண்டுள்ளது.

பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையில் 15 கிலோவாட் திறன் கொண்ட சூரிய சக்தி மின் உற்பத்தி அமைப்பும் இந்த அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது,

[]<<<>>>[]

நாட்டில் பல்வேறு தேசிய நெடுஞ்சாலைகள் கட்டுமானத்தில் இதுவரை எட்டு மில்லியன் டன் கழிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

நாக்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், குப்பைகளை வளமாக்கும் நடவடிக்கைக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

நாதக்பூர் மாநகராட்சியில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், அங்குள்ள மின் உற்பத்தி நிலையத்தின் பயன்பாட்டுக்கு கொண்டு செல்லப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கழிவுகளிலிருந்து உயிரி எரிவாயு தயாரிக்க முடியும் என்றும் திரு நிதின் கட்கரி கூறினார்.

[]<<<>>>[]

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் ரயில் விபத்துகள் பெருமளவு குறைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் தூய்மை இந்தியா நிகழ்ச்சியில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2014-ஆம் ஆண்டுக்கு பிறகு ரயில் விபத்துக்கள் 70 சதவீதம் வரை குறைந்துள்ளது என்று கூறினார்.

ரயில்வே கட்டமைப்புகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விபத்துக்கான காரணங்களை கண்டறிந்து அதனை களைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கவாச்- தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

**[]<<<>>>[]**

இந்திய கடற்படை சார்பில் இந்தோ – பசிபிக் மண்டல மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

மூன்று நாடகள் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தோ- பசிபிக் மண்டலத்தின் புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது.

மாநாட்டின் இரண்டாவது நாளான நாளை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் பங்கேற்கிறார்.

**[]<<<>>>[]**

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

இதையொட்டி அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 90 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரேகட்டமாக நாளை மறுநாள் தேர்தல் நடைபெறவுள்ளது.

குருஷேத்ரா மாவட்டத்தில் பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத்சிங் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரஸ் கட்சி நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளித்து வருவதாக அவர் குற்றம்சாட்டினார்.

கன்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மாநிலத்தில் உள்ள பிஜேபி அரசு ஐந்து லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என வாக்குறுதி அளித்ததாகவும், ஆனால் அதை நிறைவேற்றவில்லை என்றும் குறை கூறினார்.

ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகளும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

[]<<<>>>[]

அரசியல் வியூக வல்லுநர் திரு பிரசாந்த் கிஷோர் புதிய கட்சி ஒன்9ற தொடங்கியுள்ளார்.

பாட்னாவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 'ஜன் சுராஜ்' என்ற புதிய கட்சியை தொடங்குவதாக அவர் அறிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் அம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 243 தொகுதிகளிலும் தமது கட்சி போட்டியிடும் என்று அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தெற்கு ரயில்வே சார்பில் கடந்த இரண்டு வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட தூய்மைப்பணியின்போது இரண்டாயிரத்து 574 டன் குப்பைகள் அகற்றப்பட்டதாக அதன் கூடுதல் பொதுமேலாளர் திரு கௌசல் கிஷோர் தெரிவித்துள்ளார்.,

சென்னை சென்ட்டிரல் ரயில் நிலையத்தில் நடைபெற்ற தூய்மை விழிப்புணர்வு முகாமில் பேசிய அவர், கடந்த இரண்டு வாரங்களில் மூவாயிரம் இடங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறினார்.

இதில் சுமார் ஒரு லட்சம் பேர் ஈடுபட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பணிகளின்போது 11 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டதாகவும், சென்னை கோட்டத்தில் மட்டும் மூவாயிரத்து 500 மரக்கன்றுகள் நடப்பட்டதாகவும் திரு கௌசல் கிஷோர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

கதர் நூற்பாளர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளதாக மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து பேசிய காதி கிராம தொழில் ஆணையத்தின் தலைவர் மனோஜ் குமார், கடந்த பத்து ஆண்டுகளில் காதி நூற்பாளர்களின் வருவாய் 213 சதவீதம் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

காதியின் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தும் நடவடிக்கையில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.

காதி பொருட்களுக்கு நேற்று முதல் 20 சதவீத தள்ளுபடியும், கிராமத் தொழில் பொருட்களுக்கு 10 சதவீத தள்ளுபடியும் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த தள்ளுபடி அடுத்த மாதம் 30-ம் தேதி வரை நாடு முழுவதும் தொடரும் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த நிதியாண்டில் காதி துறையின் வர்த்தகம் ஒரு லட்சத்து 55 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது என்று திரு மனோஜ் குமார் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

தெற்கு லெபனானில் தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் ஹெஸ்புல்லா அமைப்புடனான மோதலில் இஸ்ரேல் ராணுவ வீரர்கள் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனை உறுதி செய்துள்ள இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு இது குறித்து அவசர ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில் லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒரே நாளில் 46 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

இலங்கை அதிபர் திரு அநுர குமார திசநாயகவை, அந்நாட்டுக்கான இந்தியத் தூதர் திரு சந்தோஷ் ஜா நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

இலங்கையின் வளர்ச்சிக்கு உதவ இந்தியா தயாராக உள்ளது என்று இந்திய தூதர் அப்போது தெரிவித்தார்.

இலங்கை ஒரு அமைதியான மற்றும் நிலையான வளர்ச்சியை கொண்ட தேசமாக திகழ வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் டிஜிட்டல்மயமாக்கல் நடவடிக்கைகளுக்கு இந்தியா உதவும் என்றும் திரு சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

[]<<<>>>[]

இலங்கையில் சர்வதேச செலாவணி நிதியத்தின் செயல்திட்டங்கள் தொடர்பாக ஆய்வு செய்ய அந்த நிதியத்தின் தூதுக் குழு ஒன்று இலங்கை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அந்தக் குழு மதிப்பீடு செய்ததுடன், அடுத்த கட்டமாக இரண்டு புள்ளி ஒன்பது பில்லியன் டாலர் நிதியை இலங்கைக்கு விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் அப்போது விவாதிக்கப்பட்டது.

[]<<<>>>[]

உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இன்று தொடங்குகிறது.

இந்தியா உட்பட பத்து அணிகள் இப்போட்டியில் பங்கேற்கின்றன.

முதல் நாளான இன்று பங்ளாதேஷ் - ஸ்காட்லாந்துடனும், பாகிஸ்தான் - இலங்கையுடனும் மோதுகின்றன.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா — நியுசிலாந்தை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

குளோபல் செஸ் லீக் போட்டி லண்டனில் இன்று தொடங்குகிறது.

வரும் 12-ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் விஸ்வநாதன் ஆனந்த், ப்ரக்யானந்தா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

கடற்படையின் இரண்டு பெண் அதிகாரிகள் உலகைச் சுற்றும் சாகசப் பயணத்தைத் தொடங்கியுள்ளனர்.

லெப்டினன்ட் கமாண்டர் தில்னா மற்றும் ரூபா ஆகியோர் நாவிகா சாகர் பரிக்கிரமா என்ற இந்த பயணத்தை கோவாவில் இருந்து நேற்றுத் தொடங்கினர்.

பாய்மரக் கப்பலான தாரிணியை கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

எட்டு மாத காலத்தில் இந்த இரு பெண் அதிகாரிகளும் 21 ஆயிரத்து 600 கடல் மைல் பகுதியைக் கடக்கவுள்ளனர்.

***End of News***